**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 61/2021** **நாள் 09.03.2026.**

**வாசா.,1 திரு.முத்தீஸ்வரன்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

நல்லதம்பி தேவர் என்பவர் சுந்தரராஜ், சுப்பிரமணிய தேவர், கருப்பன தேவர், கிருஷ்ணசாமி , பாண்டி ஆகியோர்களின் வாரிசு என்றால் சரிதான். சுப்பிரமணிய தேவரின் வாரிசு தான் 1, 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நல்லதம்பி தேவர் என்பவருக்கு 60 சென்ட் வாய்மொழி பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நல்லதம்பி தேவருக்கு சர்வே எண்.963 ல் 60 சென்ட் ஒதுக்கப்படவில்லை அதற்கு பதிலாக ஈஞ்சார் கிராம் 940 ல் 1 ஏக்கர் 63 சென்ட் ஒதுக்கப்பட்டது என்பது என் மாமா சொல்லி எனக்கு தெரியும். நல்லதம்பி தேவருக்கு 963 ல் 60 சென்ட் ஒதுக்கப்பட்டது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் அது சரியல்ல. எனது கட்சி என்னவென்றால் சுந்தர தேவரின் வாரிசுகள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்துகொண்டதில் நல்லதம்பி தேவருக்கு சர்வே எண்.940 ல் 1 ஏக்கர் 63 சென்ட் ஒதுக்கப்பட்டதால் சர்வே எண்.963 எவ்வித சொத்தும் ஒதுக்கப்படவில்லை. சர்வே எண்.940 ல் உள்ள சொத்தானது சுந்தர தேவருக்கோ அவரது முன்னோர்களுக்கோ பாத்தியப்பட்டால் தான் மேற்படி சொத்தானது சுந்தர தேவரின் வாரிசுகளுக்கு கிடைக்கப்பெறும் என்று சொன்னால் அது சரிதான். சர்வே எண்.940 சொத்துக்கானது சுந்தர தேவருக்கோ அவரது முன்னோர்களுக்கோ யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.940 சொத்துக்கானது சுந்தர தேவருக்கோ அவரது முன்னோர்களுக்கோ யாருக்கு பாத்தியப்பட்டது என்று ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.963 பெரியகருப்பன தேவர் என்பவருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் 1 ஏக்கர் 21 சென்ட் ஒதுக்கப்பட்டது.அவ்வாறு ஒதுக்கப்பட்டது என்பதற்குஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். பெரியகருப்பன தேவருக்கு 1 ஏக்கர் 21 சென்ட் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. அவருக்கு 60 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பெரியகருப்பன தேவருக்கு 1 ஏக்கர் 21 சென்ட் ஒதுக்கப்பட்டது என்பதற்கு வருவாய் ஆவணங்களோ மற்ற ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 , 2 ஒத்தி மற்றும் கிரைய ஆவணமானத்தில் நல்லதம்பி தேவர் எனக்கு பாத்தியமான சொத்து என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.1, 2 ஆனது சர்வே எண்.940 சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ.3 ஆவணமான ஒத்திபத்திரத்தில் எழுதிக்கொடுத்த நபர் எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளது

என்றால் சரிதான். வாசாஆ.3 ஆவணத்தில்ல் 963, 960, 964/2, 969 ஆகிய சர்வே எண்கள் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். 963 சர்வே எண்ணில் ஏக்கர் 19 செண்ட் 42 ல் பிரிவினையில்லாத 1/32 பங்கு செண்ட் 61 என்று சொல்லப்பட்டுள்ளது .அது எந்த பக்கம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.4 ஆவணமானது சின்னக்கருப்பன தேவர் வாரிசுகளான மாரிமுத்து தேவர், சித்திரைவேல் தேவர், ராமு தேவர் ஆகியோர்களிடமிருந்து 25.04.1959 ம் தேதி உலகம்மாள் என்பவர் பிராது 2 வது தபசில் சொத்தில் உள்ள ஒத்தியை மீட்டு கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான்.மேற்படி சொத்தானதை மாரிமுத்து தேவர், சித்திரைவேல் தேவர், ராமர் தேவர் ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று வாசாஆ.4 ஆவணத்தில் சொல்லியுள்ளது என்றால் சரிதான் அந்த ஆவணத்தில் சர்வே எண்.963 ல் ஏக்கர் 19 செண்ட் 42 பிரிவின்றி 1/32 பங்குக்கு செண்ட் 60-11/16 என்று சொல்லியள்ளது என்றால் சரிதான். மேற்படி செண்ட் 60-11/16 ஆனது எந்த பக்கம் அமைந்துள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வாசாஆ.4 ஆவணத்தில் இந்த சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்தானதை நான் பிராதில் 3 வது அயிட்டமாக காட்டியுள்ளேன். இந்த சொத்து தான் பிராதில் 3 வது அயிட்டமாக நான் சொல்லவில்லை என்று சொன்னால் பிராது 1 வது செட்டியூலில் 2 வது அயிட்டமாகவும் 2 வது செட்டியூலில் 1 அயிட்டமாகவும் காண்பித்துள்ளேன். 3 வது அயிட்டமாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.5 ஆவணமானது பெரியகருப்பன தேவர் மற்றும் அவரது வாரிசுகள் சேர்ந்து 22.06.1946 ம் தேதி சுந்தர தேவரின் வாரிசான முத்துதேவரின் மகள் சின்னகனியம்மாள் மற்றும் அவரது கணவர் துரைராஜ் தேவருக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணமாகும்.அதில் சர்வே எண்.963 ல் ஏக்கர் 19 செண்ட் 42 ம் , சர்வே எண்.964/2 ல் ஏக்கர் 7 செண்ட் 64 ம், சர்வே எண்.969 ல் ஏக்கர் 5 செண்ட் 22 ம் , சர்வே எண்.964/1 ல் ஏக்கர் 2 செண்ட் 60 ம் ஆக மொத்தம் 54 ஏக்கர் , செண்ட் 74 அதில் பிரிவினையில்லாத 1/16 பங்கு என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.963 ல் உள்ள கிணற்றில் 1/8 பங்கு ஜலபாத்தியம் என்று சொல்லியுள்ளது. பிரிவினையில்லாத 1/16 பங்கானது எந்த பக்கம் என்று அந்த ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1/16 பங்குக்கு எவ்வளவு விஸ்தீரணம் என்று வாசாஆ.5 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.5 ஆவணப்படிக்கு பெரியகருப்பன தேவருக்கு சர்வே எண்.963 ல் 1/16 பங்கு கிடையாது என்று சொன்னால் அது சரியல்ல. அவருக்கு உரிமையில்லாத கூடுதல் விஸ்தீரணம் போட்டு வாசாஆ.5 கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி கிரையமானது நல்லதம்பி தேவரையோ, அவரது வாரிசுதாரரையோ கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.6 ஆவணமானது சின்னக்கனி அம்மாள்அவரது கணவர் துரைராஜ் தேவர் ஆகியோர்கள் 16.04.1956 ம் தேதி சின்னக்கிருஷ்ணசாமி தேவர் மனைவி சின்ன வேலுத்தாய் என்பவருக்கு மேல்

ஒத்தி பத்திரம் எழுதிக்கொடுத்துள்ள ஆவணம். வாசாஆ.5 ல் உள்ள சொத்து விபரமும், வாசாஆ.6 ல் உள்ள சொத்து விபரமும் ஒன்றானது தான் . சர்வே எண்ணில் 963 ல் அவருக்கு உரிமையில்லாத கூடுதல் விஸ்தீரணம் போட்டு வாசாஆ.6 கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி கிரைய ஆவணமானது நல்லதம்பிதேவரையோ, அவரது வாரிசுதாரரையோ கட்டுப்படுத்தாது என்றால் அது சரியல்ல. வாசாஆ.7 ஆவணமானது சின்ன வேலுத்தாயுக்கு பெரியகருப்பன தேவரின் வாரிசுகள் 31.07.1957 ம்ஆண்டு எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணமாகும். அது சர்வே எண்.963 ல் உள்ள 1 ஏக்கர் 21 சென்ட் நிலத்தை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். அதில் பிரிவினையின்றி 1/16 பங்கு பாகம் என்று தான் சொல்லியுள்ளது என்றால் சரிதான் இந்த ஆவணத்தில் இது போக வேறு சொத்துக்களும் சொல்லியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்ணில் 963 ல் அவருக்கு உரிமையில்லாத கூடுதல் விஸ்தீரணம் போட்டு வாசாஆ.7 ஒத்தி ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி ஒத்தி ஆவணமானது நல்லதம்பிதேவரையோ, அவரது வாரிசுதாரரையோ கட்டுப்படுத்தாது என்றால் அது சரியல்ல. வாசாஆ.8 ஆவணமானது பெரியகருப்பன தேவர் மகனான கஞ்துாரி தேவர் தனக்கும் தனது மைனர் மகன் பாண்டிச்சாமி கார்டியனாக இருந்து சர்வே எண் 963 ல் ஏக்கர் 19 சென்ட் 42 ல் பிரிவினையின்றி 1/48 பங்கு என்றும் அதில் சென்டானது 40-11/24 என்று கிரையம் பெற்றதாக உள்ள ஆவணமாகும். மேற்படி ஆவணத்திலும் இந்த சொத்தானது பூர்வீக சொத்தாகவே காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் வாசாஆ.8 ஆவணத்தில் சர்வே எண்.963 ல் கிணறானது 1/24 பங்கு என்று சொல்லியுள்ளது. வாசாஆ.7 மற்றும் வாசாஆ 8 ஆவணங்களில் இந்த சொத்துக்கள் எந்த பகுதியில் அமைந்துள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த சொத்தானதை உலகம்மாள் என்பவர் கிரையம் வாங்கியுள்ளார். வாசாஆ.8 ஆவணமானது பெரியகருப்பன தேவர் உயிரோடு இருக்கும்போது எழுதிக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. சர்வே எண்ணில் 963 ல் அவருக்கு உரிமையில்லாத கூடுதல் விஸ்தீரணம் போட்டு வாசாஆ.8 கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி கிரைய ஆவணமானது நல்லதம்பிதேவரையோ, அவரது வாரிசுதாரரையோ கட்டுப்படுத்தாது என்றால் அது சரியல்ல. வாசாஆ.9 ஆவணமானது பெரியகருப்பன தேவர் வாரிசுகள் பொன்னையா என்ற சுந்தர தேவர், மேற்படி தம்பி நாகையா தேவர் ஆகியோர்களிடமிருந்து கடந்த 16.03.1960 ம் ஆண்டு சர்வே எண்.963 ல் ஏக்கர் 19 சென்ட் 42 ல் பிரிவின்றி 1/24 பங்கு பாகம் சென்ட் 80-11/16 கிரையம் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தானது அவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான் வாசாஆ.9 ஆவணத்தில் இது போக வேறு சொத்துக்களையும் காட்டியுள்ளது என்றால் சரிதான். அதில் பிரிவினையின்றி 1/24 பங்கு பாகம் என்று

தான் சொல்லியுள்ளது என்றால் சரிதான். மேற்படி பெரியகருப்பன தேவர் உயிரோடு இந்த போது இந்த சொத்தானதை எழுதிக்கொடுக்கபட்டதா என்று கேட்டால் எனக்கு தெரியாது.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி இரு தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.